# மோட்டார் வாகனக் காப்புறுதிப் பூட்கையொன்றைப் பெற்றுக்கொள்ளும் போது தெரிந்துக் கொள்ள வேண்டியவை





## மோட்டார் வாகன காப்புறுதியினால் காப்பீடு செய்யப்படும் சேதங்கள்

வாகன விபத்து, உள்ளிருந்து ஏற்படும் தீ, வெளியில் ஏற்படும் வெடிப்பு, இடிமின்னல் தாக்குதல் போன்றவற்றினால் ஏற்படும் சேதங்களை பிரதானமாக காப்பீடு செய்ய முடியும். அதேபோல் வாகன விபத்தினால் மூன்றாம் தரப்பினருக்கு ஏற்படும் சரீர சேதங்கள் மரணம் மற்றும் ஆதன சேதங்கள் ஆகியவை காப்புறுதி ஒப்பந்தத்தில் உள்ள விதிகளுக்கு ஏற்ப கட்டாயமாக காப்புறுதி பாதுகாப்பு செய்யப்படும். வாகனத்திற்கு ஏற்படும் தீ மற்றும் களவு போன்றவைகளும் காப்பீடு செய்யப்படும்.

அதேபோல் மேலதிகக் காப்பீடாக கலவரம் மற்றும் சிவில் கலவரம், பயங்கரவாத செயற்பாடுகள், வெள்ளம் மற்றும் இயற்கை விபத்துகளினால் ஏற்படும் சேதங்களையும் காப்பீடு செய்ய முடியும்.

## மோட்டார் வாகன காப்புறுதி ஒன்றை தேர்ந்தெடுத்தல்

மோட்டார் வாகன காப்புறுதியின் போது எவராலும் குறிப்பிட்ட பொது காப்புறுதி நிறுவனத்திலிருந்து காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்த யாருக்கும் அதிகாரமில்லை. மோட்டார் வாகன காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளும் போது வாகனத்தைப் பயன்படுத்தும் நோக்கத்தை அறிவிக்க வேண்டியது முக்கியம் ஆகும். மேலும் வாகனத்தின் சந்தைப் பெறுமதிக்குக் காப்புறுதி செய்வதற்கு மறக்க வேண்டாம்.



## விபத்து நடந்தவுடன் செய்ய வேண்டியவைகள்

விபத்து நடந்தவுடன், அது தொடர்பாக காப்புறுதி நிறுவனத்திற்கு அறியத்தாருங்கள். அதேபோல், விபத்து நடைபெற்ற இடத்திற்கு அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தல் கட்டாயமானதாகும். விசேடமாக காப்புறுதிக் கோரிக்கையினை மேற்கொள்ளும் போது, விபத்து நடந்த முறை, இடம், நேரம், சாரதி போன்ற விடயங்களைத் தெளிவாகக் கூறுதல் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு மிக முக்கியமானதாகும்.



மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் சமூக வலைத்தளத்திற்கு நுழையுங்கள்.




**இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு**

11 வது மாடி, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 01.
தொலைபேசி : (011) 2396184-9 தொலைநகல்: (011) 2396190
மின்னஞ்சல் info@ircsl.gov.lk இணையம் www.ircsl.gov.lk